## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கக் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1992, மார்ச் மாதம் 25 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1992, மார்ச் மாதம் 27 ஆந் தேதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : ரூபா 1.60

# 1992 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கக் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1992, மார்ச் மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. — ஓ. 31/84

## இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கக் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

"இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கக் கழகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமெனக் கொழும்பில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாகக் கொண்டுநடாத்தியும் நிறைவேற்றியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டமானது 1992 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கக் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கக் கழகத்தின் (இதனகத்துப் பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உறுப்பினர்களாக தற்போதுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றவர்களுமான அத்தகையோரான அத்தகையாட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கக் கழகம்" என்னும் பெயரின் கீழும், மகுடத்தின் கீழும் இடையறு வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்; அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன், அது பொது இலச்சினையொன்றை வைத்திருப்பதற்கும், பயன்படுத்துவதற்கும், விரும்பியாங்கு அதனை மாற்றுவதற்கும் முழுத் தத்துவத்தையும் அதிகாரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கக் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமிய சகோதரத்துவ உணர்வையும், தோழமையையும், ஒற்றுமையையும் வளர்த்தல் ;

(ஆ) முஸ்லிம் சமூகத்தின் நலன்களைப் பாதுகாத்துப் பேணிவரும் அதேவேளையில் ஏனைய சமூகத்தவர்களுடன் சமூக சகவாழ்வு உறவுநிலைப்பங்கைத் தொடர்ந்து பேணலும், வளர்த்தலும், மேம்படுத்துதலும் ;

(இ) மத, கல்வி, சமூக, பொருளாதாரத்துறைகளில் இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகத்தவர்களது பிரச்சினைகளை ஆய்வு செய்தலும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் உதவியையும் நல்குதலும் ; அத்துடன் அத்தகைய நோக்கங்களுக்காக இலங்கையடங்கிலும் கிளைகளை ஊக்குவித்துத் தாபிப்பதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை விரிவாக்கல் ;

(ஈ) இலங்கையிலுள்ள முஸ்லிம்களின் பண்பாட்டு, ஒழுக்க, கல்வி, சமூதாய, பொருளாதார நலனை மேம்படுத்துவதற்கென அரசினதும், வலிந்துதவு ஒழுங்கமைப்புகளினதும், தனியாட்களினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடிப்பெறுதல்;

(உ) உதவி தேவைப்படுவோரும், அருகதையுடையவருமான முஸ்லிம் மாணவர்களுக்கு உதவி வழங்கி இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அவர் தமது படிப்பை மேற்கொள்ளுதலை இயலச்செய்தல் ;

(ஊ) இஸ்லாமிய பண்பாடு, மதம் என்பவற்றின் கற்கையை ஊக்குவித்து மேம்படுத்துதல் ; அத்துடன்

(எ) மேற்போந்த குறிக்கோள்களை எய்துவதன் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவான அத்தகைய வேறு செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

இப்பிரிவில் "முஸ்லிம்" என்னும் சொல் இஸ்லாம் மதத்தைக் கடைப்பிடிக்கும் தனியாள் ஒருவர் எனப் பொருளாகும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணத்தைக் கடனாகப் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுவோரான ஆளணியினரை வேலையிலீடுபடுத்துவதற்கும், ஊழியத்திலமர்த்துவதற்கும், வேலைநீக்கம் செய்வதற்கும் ஆன தத்துவமும் அடங்கும்.

முகாமைப் பேரவை.

5. (i) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களானவை, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக, அத்தகைய விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியோரான அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படக்கூடியோரான, பதவிதாங்குனர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த முகாமைப் பேரவையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(ii) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைப் பேரவையானது, இச் சட்டம் நடைமுறைக்கு வரும்நேரத்தில் பதவிவகிக்கும் கழகத்தின் முகாமைப் பேரவையாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இரு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்குத் தொடர்ந்து பதவியிலிருத்தலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், கழகத்தின் தேசியத் தலைவரான சமாதான நீதிவான் திரு. எம். ஐ. எம். நளிம் அவர்கள், அவர் முன்னராகவே தமது பதவியைத் துறந்தாலன்றி கூட்டுத்தாபனத்தின் தேசியத் தலைவராகவும், நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் உறுப்பினரொருவராகவும் முகாமைப் பேரவையின் உறுப்பினரொருவராகவும் அவரது வாழ்நாளின்போது தொடர்ந்திருந்துவருதல் வேண்டும்.

6. கூட்டுத்தாபனத்தின் எல்லா அசைவற்ற ஆதனங்களினதும் கட்டுக் காப்பானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தேர்ந்தெடுக்கப் பட்டோரான மதிப்புமிக்கோரும், இஸ்லாமிய மதத்தை அனுட்டிப்போரு மான ஆட்கள் மூவரைக்கொண்ட நம்பிக்கைபொறுப்பாளர் சபையொன் றுக்கும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக, உரித்தாக்கப்படுதல் வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

7. (1) முகாமைப் பேரவையானது உறுப்பினர்களது ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், அதன்கண் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப் பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினரது வாக்குகள் மூலமும், காலத்துக் குக்காலம், பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அல்லது அவற் றுள் எவை தொடர்பாகவும், இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறே தேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் சட்டமுறையானதாதல் வேண்டும்:— கூட்டுத்தாபனத் தின் விதிகள்.

(அ) கூட்டுத்தாபன உறுப்பினர்களை சேர்த்தல், அவர்கள் விலகு தல், அல்லது அவர்களை நீக்குதல் ;

(ஆ) முகாமைப் பேரவையினதும், நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையி னதும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும், நியமித்தலும், பதவிவிலக்குதலும் ;

(இ) முகாமைப் பேரவையினதும், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை யினதும், கூட்டுத்தாபனத்தின் பல்வேறு துணைக்குழுக்களின தும், பதவி தாங்குனர்களினதும், முகவர்களினதும் கடமைகள்;

(ஈ) அலுவல்களைக் கையாள்வதிலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பி லும், அதன் கணக்குகளைப் பேணுவதிலும் கணக்காய்வு செய் வதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ; அத் துடன்

(உ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் அதன் குறிக்கோள்களை எய்துதல்.

(2) முகாமைப் பேரவையால் ஆக்கப்படும் விதியெதுவும், (1) ஆம் உட் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்ற அதேமுறையில் திருத் தப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் விதி களுக்கு அமைந்தவர்களாதல் வேண்டும்.

கழகத்திடமிருந்து செல்மதியாக உள்ளனவும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

8. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் உள்ளவையான கழகத்தினது எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், கழகத்துக்குச் செல்மதியான எல்லா தனிசுகளும், கழகத்துக்கு செலுத்தப்படற்பாலனவான ஒப்பப் பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்கள் மூவரது சமுகத்திலன்றி எத்தகையதுமான எச்சாதனத்திலும் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடுதலும் வேண்டும்; அத்துடன் அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாகவிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

10. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவின், மானியத்தின், கொடையின் அல்லது மரணசாதனக் கையளிப்பின் பயனாக அல்லது வேறுவகையில், அதற்கு உரித்தாக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும், வைத்திருப்பதற்கும், சட்டத்தில் தகுதியுடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் எல்லாமும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைவாகவும், அவற்றை விற்பதற்கான, ஈடுவைப்பதற்கான, குத்தகைக்குக் கொடுப்பதற்கான, கொடுத்து, மாற்றுவதற்கான அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கான மூழுத்தத்துவத்துடன், கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

குடியரசினதும் மறுபேர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கிநிற்றல்.

12. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.